www.tamilarangam.net



# ஈழமும் இந்தியாவும்-11: ஜெயவர்த்தனவுக்கு எதிராக இந்திராவை தூண்டிய காரணிகள்

ஞாயிற்றுக்கிழமை, 23 ஜனவரி 2011 04:18

SHARE



போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சியளிப்பது, ஜெயவர்த்தன அரசாங்கத்தைப் பணியவைப்பதற்குப் போராளிகளைப் பயன்படுத்துவது என்ற இந்திய அரசின் திட்டத்துக்கு பல்வேறு காரணிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

ஆயுதப் பயிற்சிக்காக இந்திய அரசு எடுத்த நகர்வுகளையிட்டுப் பார்ப்பதற்கு முன்னதாக அப்போதைய சர்வதேச மற்றும் உள்நாட்டு நிலைமைகள் தமிழ்ப் போராளிகளைப் பயன்படுத்துவது என்ற இந்திரா காந்தியின் திட்டத்துக்கு எந்தளவுக்குப் பங்களிப்பைச் செய்துள்ளன என்பதைப் பார்ப்போம்.

தமிழ்ப் போராளிகளைப் பயன்படுத்துவது என்ற இந்திரா காந்தியின் திட்டத்துக்கு அந்தக் காலப்பகுதியில் காணப்பட்ட அமெரிக்க – சோவியத் அணிகளுக்கு இடையிலான பனிப்போர் அல்லது கெடுபிடிப்போரும் ஒரு காரணமாக அமைந்திருந்தது எனவும் கூறமுடியும்.

இரண்டாம் உலகப்போரின் முடிவுடன் ஆரம்பமான இந்தப் பனிப்போர், சோவியத் யூனியன் பல துண்டுகளாக உடைந்து சிதறிய 1989 ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்தது. இந்தப் பனிப்போரின் காலத்தில் உலகம் இரண்டாகப் பிளவுண்டிருந்தது. ஒரு தரப்பு அமெரிக்காவுக்கு ஆதரவான முகாமில் இருந்த அதேவேளையில், மறுதரப்பு சோவியத்துக்கு ஆதரவான முகாமிலிருந்தது.

இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட மூன்றாவது அணியாக அணிசாரா அமைப்பு இருந்தது எனக் கூறப்பட்டாலும் அதிலுள்ள பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவின் பின்பாக அல்லது சோவியத் யூனியனின் பின்பாகவோ அணிவகுத்து நின்ற நிலையைத்தான் காணக்கூடியதாக இருந்தது. இந்த நிலையில் இலங்கையும் இந்தியாவும், வெவ்வேறான முகாம்களில் இருந்தமையும் நிலைமைகள் மோசமடைவதற்குப் பிரதான காரணமாக இருந்தது. இலங்கை அமெரிக்காவுக்கு ஆதரவாக இருந்த அதேவேளையில், இந்தியா சோவியத் முகாமிலிருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரையில் 1977 ஆண்டு வரையில் பதவியிலிருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் சர்வதேச அரசியலில் தெளிவான ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தது. குறிப்பாக அணிசாராக் கொள்கையை அந்த அரசாங்கம் தெளிவான முறையில் பின்பற்றியது. அத்துடன் ஓரளவுக்குச் சோவியத் சார்பான அணுகுமுறையையும் கொண்டிருந்தது. இது இந்தியாவுக்கு எந்தவகையிலும் பிரச்சினையாக இருக்கவில்லை.

இருந்தபோதிலும் 1977 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம் இந்த வெளிவிவகாரக் கொள்கையில் தெளிவான மாற்றம் ஒன்றை வெளிப்படுத்தியது. அணிசாரக் கொள்கையில் தன்னுடைய உறுதிப்பாட்டை ஜெயவர்த்தன தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்தாலும் கூட, அமெரிக்க சார்பே அவரிடம் பெரிதும் காணப்பட்டது.

திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய அவர், வெளிநாட்டு முதலீடுகளுக்காக முதல் தடவையாக கதவுகளைத் திறந்துவிட்டார். அதேவேளையில், அவருடைய வெளிவிவகாரக் கொள்கை அமெரிக்காவுக்குச் சார்பானதாகவே மாற்றமடையத் தொடங்கியது. அமெரிக்காவுடனான ஜெயவர்த்தனவின் உறவுகள் வலுவடைந்த அதேவேளையில், இலங்கையை மையப்படுத்திய தமக்கு எதிரான நகர்வுகளுக்கு இலங்கையை அமெரிக்கா பயன்படுத்துகின்றதா என்ற சந்தேகம் இந்தியாவுக்கு இருந்தது.

குறிப்பாக இந்தியாவின் முக்கிய எதிரி எனக் கூறப்படக் கூடிய பாகிஸ்தான் அமெரிக்காவுக்குச் சார்பான நாடாக இருந்த அதேவேளையில், இலங்கையுடனான பாகிஸ்தானின் உறவுகளும் மிகவும் பலமானதாகவே இருந்தது. அதேவேளையில் திருமலை துறைமுகம் மற்றும் சீனன்குடாவிலுள்ள எண்ணெய்க் குதங்களையும் அமெரிக்காவுக்குக் கொடுப்பதற்கான முயற்சிகளை ஜெயவர்த்தன மேற்கொண்டார்.

ஜெயவர்த்தனவின் இந்த நகர்வுகள் தன்னுடைய புவியியல் சார்ந்த கேந்திர பாதுகாப்பு நலன்களுக்குப் பாதகமானது என இந்தியா கருதியது. இவ்விடயத்தில் அப்போது வல்லரசாக இருந்த சோவியத் யூனியனின் ஆதரவும் இந்தியாவுக்கே இருந்தது. இந்தியப் புலனாய்வு நிறுவனமான றோவும் இதுதொடர்பாக இந்தியத் தலைமைக்கு எச்சரிக்கை ஒன்றை அனுப்பியிருந்தது. குறிப்பாக அணிசாரா அமைப்பிலிருந்து இலங்கை விலகப்போகின்றது எனவும், அமெரிக்காவின் செல்வாக்குக்கு உட்பட்ட ஒரு நாடாக இலங்கை மாற்றமடையப் போகின்றது எனவும், இந்திரா காந்திக்கு அனுப்பிவைத்த எச்சரிக்கையில் றோ குறிப்பிட்டிருந்தது.

இந்தியாவின் கேந்திரப் பாதுகாப்பு நலன்களை இது கடுமையாகப் பாதிக்கும் எனவும் றோ தன்னுடைய எச்சரிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இஸ்ரேலிய புலனாய்வு அமைப்பான மொசாட், அமெரிக்காவின் புலனாய்வு நிறுவனங்களில் ஒன்றான தேசிய பாதுகாப்பு நிறுவனம் என்பன கொழும்புக்கு ஆலோசனை வழங்கிவருவது தொடர்பான தகவல்களையும் இந்திரா காந்திக்கு றோ தெரியப்படுத்தியிருந்தது. இதனைவிட இஸ்ரேலின் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பான சின்பெட் இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்குப் பயிற்சியளிப்பதற்கான பொறுப்பை ஏற்றிருந்தது.

இவை அனைத்தும், தன்னுடைய தென்கரையோரத்தில் தனக்கு எதிரான ஆபத்து ஒன்று உருவாகியிருக்கின்றது என்பதையே இந்தியாவுக்கு உணர்த்துவதாக அமைந்திருந்தது.

இதனைவிட பாகிஸ்தானில் உருவாகியிருந்த நிலைமைகளும் இந்தியாவின் அணுகுமுறையைத் தீர்மானிப்பதில் முக்கியமான பங்கை வகித்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். குறிப்பாக இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகளின் ஊடுருவல்கள், தாக்குதல்கள் என்பன பாகிஸ்தானினால் நன்கு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்தியாவுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் வகையில் இவை அமைந்திருந்தன. பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ அமைப்பினரால் பயிற்றப்பட்ட தீவிரவாதிகளே இந்தியாவுக்குள் ஊடுருவி நாசகாரச் செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரகடனப்படுத்தப்படாத போரின் ஒருபகுதியாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுவந்தன.

இந்தநிலையில் இலங்கையிலும் பாகிஸ்தானின் செல்வாக்கு அதிகரித்துவருவது தன்னுடைய பாதுகாப்புக்கான அச்சுறுத்தலை மேலும் தீவிரமடையச் செய்வதாக அமையலாம் என இந்தியா கருதியது. இலங்கைப் படைகளுக்கு பாகிஸ்தானின் பயிற்சி போன்ற செய்திகள் இந்திரா

பக்கங்கள்

தமிழீழம்
தமிழ்நாடு
உலகத்தமிழர்
சிறீலங்கா
சமகாலப்பார்வை
பதிவுகள்
சிறப்பு கட்டுரைகள்
நிகழ்வுகள்
விழுதுகள்

ஒளி / ஒலி

காணொலிகள்
படங்கள்
ஒலிப்பதிவுகள்

தேடல்

தேடுக

பதிவுகள்

பதிவுகள்

**ஈழமும் இந்தியாவும்-15: பயிற்சி முடிந்து யாழ். திரும்பிய போராளிகள்**



ஈழப் போராளி அமைப்புக்களு இந்திய ஆயுதப் பயிற்சிகள் இரண்டு பிரிவுகளாக இடம்பெற்றது என்பதை கடந்த வாரத்தில் பார்த்தோம். ஒரு பறம் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளக்கு உத்தர பிரதேசத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் பயிற்சிகளை வழங்க, மற்றொரு புறத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றம் ஈரோஸ் அமைப்பின் போராளிகளுக்கு இந்திய இராணுவ அதிகாரிகள் ஆயுதப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

**ஈழமும் இந்தியாவும்-14: றோ அதிகாரியை சந்திக்க அவசரமாக தமிழகம் வந்த பிரபாகரன்**



இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தைப் பயன்படுத்திக் ஈழப் போராளி அமைப்புக்கள் அனைத்தினதும் தலைமையைத் தான் எடுத்துக்கொள்வதற்காக சந்திரஹாசன் வகுத்துவைத்திருந்த திட்டம் அன்டன் பாலசிங்கத்துக்கு பெரும் சீற்றத்தைக் கொடுத்தது. இது சந்திரஹாசனின் திட்டமாக மட்டுமன்றி றோவின் ஒரு பகுதியினரும் இதனை விரும்பியிருப்பதற்கான ஏதுநிலைகளும் காணப்பட்டன.

More:
ஈழமும் இந்தியாவும்-13: இந்திய ஆயுத பயிற்சியின் பின்னணியில் ஒரு திட்டம்..
ஈழமும் இந்தியாவும்-12: இந்திய ஆயுதப் பயிற்சித் திட்டமும் புலிகளும்

சிந்தனைத் துளிகள்

"நாம் யாரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை. ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்."

-தேசியத் தலைவர்

பூராயம் - RSS

தமிழீழத் தளங்கள்

தமிழீழக் குழுமம்

தமிழ்வெளி

சமகாலப்பார்வை

சமகாலப்பார்வை

**லசந்தவின் மரணத்தின் பாதை : அரசு கிளப்பும் புதிய சர்ச்சை**




இலங்கையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பு இருக்கின்றதா? அல்லது இலங்கை அரசாங்கம் இந்தப் படுகொலையில் அவரை மாட்டிவிடுவதற்கான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமும் இந்தியாவும்-11: ஜெயவர்த்தனவுக்கு எதிராக இந்திராவை தூண்டிய காரணிகள்

காந்திக்கு அச்சுறுத்தலைக் கொடுக்கும் செய்திகளாகவே அமைந்திருந்தது.

இதனைவிட ஜெயவர்த்தன அரசுக்கு எதிராக இந்திரா காந்தி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மற்றொரு தனிப்பட்ட காரணமும் ஆய்வாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியிலிருந்த காலத்தில் இந்திரா காந்தியுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை அவர் பேணினார். ஆனால் சிறிமாவின் ஆட்சிக் காலத்தின் பின்னர் தனிப்பட்ட ரீதியான உறவுகள் அந்தளவுக்குப் பலமானதாக இருக்கவில்லை.

அதேவேளையில் இந்திரா காந்தி பதவியில் இல்லாதிருந்த காலப்பகுதியில் (1977- 1982) இந்தியப் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாயுடன் நெருக்கமான உறவுகளை ஜெயவர்த்தன பேணினார். இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத ஆட்சி ஒன்றிருப்பதையே ஜெயவர்த்தன விரும்பினார். அதனால் இந்திரா காந்தியுடன் சுமூகமான உறவுகளை அவரால் பேணிக்கொள்ள முடியவில்லை. தனிப்பட்ட ரீதியாகக் காணப்பட்ட இந்த நிலைமைகள் கூட, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

தமிழ்ப் போராளி அமைப்புக்களுக்கு ஆயுதப்பயிற்சியளித்து அவர்களைப் பயன்படுத்தி ஜெயவர்த்தன அரசைப் பணிய வைக்க வேண்டும் என்ற இந்தியாவின் திட்டத்துக்கு பலம் சேர்க்கும் காரணிகளாக இவையும் அமைந்திருந்தன. இந்தப் பின்னணியில் தான் வகுத்துக்கொண்ட திட்டங்களுடன் தமிழ்ப் போராளிகளுடன் டில்லி தொடர்புகளை ஏற்படுத்தியது...

அது பற்றிய தகவல்களுடன் அடுத்த வாரம் சந்திப்போம்....

பூராயத்துக்காக
**சிவயோகன்**

Add Comment Like

இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டது (ஞாயிற்றுக்கிழமை, 23 ஜனவரி 2011 17:09)

share Tamil10 Indli Submit vote சேர்
தமிழ்10 நம்குரல் 0 VOTE!

முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா?

**மும்பையில் மகிந்தருக்கு கிடைத்த இரட்டைத் தோல்வி: புலனாய்வுத் தகவல்கள்**



உலகக் கிண்ணத்துக்கா கிரிக்கெட் போட்டியில் இலங்கை படுதோல்வியடைந்தது என்பதைவிட, இந்தப் போட்டியின் போது இந்தியாவினால் இலங்கை- குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்ட முறையில் அவமானப்படுத்தப்பட்டதுதான் கொழும்புக்குப் பெரும் சீற்றத்தைக் கொடுத்திருக்கின்றது. இந்தியாவால் அவமானப்படுத்தப்பட்டதை சொல்லவும் முடியாமல் சொல்லாமலிருக்கவும் முடியாமல் திண்டாடுகின்றது இலங்கை அரசு.

More:
- யாழ்ப்பாணத்தில் கலாச்சார சீரழிவு: வடக்கின் வசந்தம் தந்த பரிசு
- கூட்டமைப்பின் 'தீர்வுப் பொதி': அரசைத் திருப்திப்படுத்தவா?
- லிபியா நனைகிறது என்று இலங்கை அழுகிறது

இணைப்புக்கள்

**தமிழ்ச் செய்திகள்**
ஈழநேசன்
மீனகம்
யாழ் இணையம்
பி.பி.சி தமிழோசை
லங்காசிறி
செய்திகள்
தமிழ்வின்
மனிதன்
2 தமிழ்
அதிர்வு
சரிதம்
புதினம்நியூஸ்
புதினப்பலகை
இன்போ தமிழ்
தமிழ்ஸ்பை
வன்னிஒன்லைன்
தமிழ்உலகம்
தமிழ்சினன்என்
சங்கதி
பதிவு
ஈழம் பிறஸ்
யுகே தமிழ்நியூஸ்
தமிழ்த்தாய்
தமிழ்ச்செய்தி
தாய்நிலம்
ஈழம்வெப்

**ஆங்கிலச் செய்திகள்**
TamilNet
TamilNational
DailyMirror
SundayTimes
SundayLeader
Nation
LakbimaNews
TheBottomLine
TamilWeek
LankaPage
ColomboPage
TheAcademic
TamileelamNews
TamilCanadian
UKTamilNews
Sangam
TorontoTamil
Reuters
MSNBC
Yahoo
BBC
Google
Worldnews
CNN

**இணைய சஞ்சிகைகள்**
ஈழநேசன்
அப்பால்தமிழ்
தெனாலி
தமிழில் கல்வி
தமிழ்சினிமா
பதிவுகள்
தமிழ்
அப்புசாமி
சினிசவுத்
கோல்டன் தமிழ்
நெற்தமிழ்
மங்கையர் மலர்
வெப் தமிழன்
திண்ணை
தமிழோவியம்
சுரதா
காலச்சுவடு
கூடல்
வார்ப்பு
நெய்தல்
கவிமலர்
தமிழோசை
எழில்நிலா
ஈழம் வோல்பேப்பர்ஸ்
தமிழம்
தமிழமணம்
தமிழ்வாணன்
முத்தமிழ்
தமிழமுதம்
நிலாசாரல்
த தமிழ்
உயிர்மை

**தமிழ் பத்திரிகைகள்**
வலம்புரி
வீரகேசரி
தினக்குரல்
உதயன்
விகடன்
சுடர் ஒளி
குமுதம்
தினகரன்
தினத்தந்தி
விடுதலை
தினபூமி
தினமணி
மாலைச்சுடர்
தினமலர்
மாலைமலர்
கல்கி
நக்கீரன்

**தொலைக்காட்சிகள்**
வளரி வலைக்காட்சி
ஜிரிவி
மக்கள் தொலைகாட்சி
விஜய் தொலைக்காட்சி
தமிழன் தொலைகாட்சி
தமிழ விஷன்
தீபம்
குறள் தொலைகாட்சி
ஐரோப்பிய தொலைகாட்சி
ரிவி வண்
திரைப்படம் பார்க்க

**இணைய வானொலிகள்**
புலிகளின் குரல்
தமிழர் குரல்
ஐபிசி தமிழ்
பிபிசி தமிழ்
சிரிஆர் வானொலி
தமிழ்ஸ்ரார்
வெற்றி
சிரிபிசி
தமிழ் எப்எம்
கனேடிய தமிழோசை
சிஎம்ஆர் பண்பலை
தமிழ் எப்எம்
கீதவாணி
ஏரிபிசி
சக்தி எப்எம்
சூரியன் எப்எம்
ஒலி

எம்ரிஆர் வானொலி
தமிழ் ஒலி
உலக தமிழோசை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்